நாள்: 22/01/2020

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர்
நாள். 22.01.2020

செ.வெ.எண்: 42.

---

## பத்திரிக்கை செய்தி

---

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம் அருள்மிகு பெருவுடையார் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழாவை முன்னிட்டு 05.02.2020 புதன்கிழமை அன்று தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் (தேர்வுகளுக்கு இடையூறு இல்லாமல்) உள்ளூர் விடுமுறை அறிவித்து ஆணையிடப்படுகிறது. இதற்கு பதிலாக 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22-ம் தேதி (22.02.2020) சனிக்கிழமை தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும பணிநாளாக அறிவிக்கப்படுகிறது. இந்த உள்ளூர் விடுமுறை செலாவணி முறிச்சட்டம் 1881-ன் கீழ் வராது என்பதால் தஞ்சாவூர் மாவட்ட கருவூலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை கருவூலங்களும் 05.02.2020 அன்று குறிப்பிட்ட பணியாளர்களுடன் இயங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

22.01.2020